# பாட்டாளி சிந்தனை

Volume 29 No. 2

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

SUCI (Communist)

October 2018

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5


## ரஃபேல் போர் விமான ஒப்பந்தச் சர்ச்சை

# அரசாங்க உயர்மட்டத்திலான ஊழல் அளவிடமுடியாத ஆழம் சென்றடைந்திருப்பதை மீண்டுமொருமுறை வெளிப்படுத்துகிறது

இருக்கும் எண்ணற்ற உலகளாவிய வாய்ப்புகளை ஆய்வு செய்தபின் இந்திய விமானப்படையானது சில வருடங்களுக்கு முன்னர் 2012இல் தன்னிடம் இருக்கும் பழையதாகிப்போன இரஷ்ய ஜெட் போர் விமானங்களுக்குப்பதிலாக பிரான்ஸ் நாட்டின் டசால்ட் நிறுவனம் மற்றும் ஈரோஃபைட்டர் டைஃபூன் தயாரித்த இரட்டை எஞ்சின் கொண்ட ரஃபேல் போர் விமானத்தை வாங்க விரும்பி அதன் இறுதிப் பட்டியலை முன்வைத்தது. அப்போதிருந்த காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் 126 போர் விமானங்களை வாங்குவதற்கான ஒப்பந்த அறிவிப்பை வெளியிட்டது. குறைந்த விலையில் அப்போர் விமானங்களைத் தயாரித்துத்தர எந்நிறுவனமும் முன்வராததால் ஏற்கனவே விற்பனைக்குத் தயாராயிருந்த ஆனால் பறக்கும் நிலையிலிருந்த 18 ரஃபேல் ஜெட் விமானங்களை பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த டசால்ட் விமானப் போக்குவரத்து நிறுவனத்திடம் வாங்கிடவும் மீதமுள்ள 108 ஜெட் போர் விமானங்களை இந்தியாவிலுள்ள ஹிந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் லிமிடெட் (ஹெச் ஏ எல்) எனும் ஒரு பொதுத்துறை நிறுவனம் மூலம் தயாரிப்பதெனவும் திட்டமிட்டிருந்தது.

பாஜக அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின் அத்திட்டம் கைவிடப்பட்டது. 2015இல் பிரான்ஸ் நாட்டிற்கு விஜயம் செய்தபின், பிரான்ஸ் நாட்டிலிருந்து 36 ரஃபேல் ஜெட் விமானங்களை இந்தியா வாங்கும் என்ற ஒரு முற்றிலும் புதிய ஒப்பந்தத்தை மோடி அறிவித்தார். 2016 செப்டம்பரில் இந்திய அரசாங்கமும் பிரான்ஸ் அரசாங்கமும் அரசாங்க ரீதியிலான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டன. அதுவே இப்போது ரஃபேல் ஒப்பந்தம் என அழைக்கப்படுகிறது. ரூபாய் 59,000 கோடி மதிப்பிலான, தயார் நிலையிலிருக்கும் 36 இரட்டை எஞ்சின் டசால்ட் ரஃபேல் போர் விமானங்களை இந்தியா வாங்கும் என அந்த ஒப்பந்தத்தில் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அவ்வொப்பந்தத்திலிருக்கும் இழப்பீடு ஷரத்தின்படி (offset cluase) டசால்ட் நிறுவன மானது மொத்த ஒப்பந்தத் தொகையில் 50 சதவீதம் ரூபாயான 30,000 கோடியை இந்திய நிறுவனங்களில் முதலீடு செய்ய வேண்டும். இழப்பீடு ஷரத்து நிபந்தனைகளின்படி வினியோகம் செய்பவர்கள் ஒப்பந்தத் தொகையில் ஒரு பகுதியை ஏதாவது ஒரு வழியில் அவற்றை வாங்கும் நாட்டில் செலவிடக் கடமைப்பட்டி ருக்கிறது. இப்போதைய ஒப்பந்தப்படி டசால்ட் நிறுவனமானது 50 சதவீதத் தொகையை அல்லது கிட்டத்தட்ட ரூபாய் 30,000 கோடியை ராணுவ வானியல் – தொடர்பான (Aeronautics related) ஆராய்ச்சித் திட்டங்கள் மற்றும் ரஃபேல் உதிரிப்பாகங்கள் இந்தியாவில் உற்பத்தி செய்வது போன்ற இந்திய பாதுகாப்பு அமைப்பில் முதலீடு செய்வதை உத்திரவாதப்படுத்திட வேண்டும்.

### ஒப்பந்தம் குறித்து எழுந்துள்ள சர்ச்சையின் அம்சங்கள்

இந்த ஒப்பந்தம் பற்றிய இரண்டு அம்சங்கள் முதலில் சந்தேகங்களை எழுப்பியது. பின்னர் அது முணுமுணுப்பாக மாறி இறுதியில் ஒரு கலகத்தை ஏற்படுத்தியது. முதலாவது அம்சம் என்னவெனில், பாஜக அரசாங்கம் அத்தகைய ஜெட் விமானங்கள் வாங்க மிகவும் அதிகமான தொகையை செலுத்திக் கொண்டிருக்கிறது என்பதாகும். (2012இல் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் 126 ஜெட் விமானங்கள் வாங்கிட முடிவு செய்த விலையில் வெறும் 36 ஜெட் விமானங்களை மட்டுமே வாங்கிட இப்போது பாஜக அரசாங்கம் செலவு செய்கின்றது. அதாவது விலை உயர்வு என்பது 300 சதவீதத்திற்கும் மேலாக உள்ளது)

இரண்டாவதாக, ஒப்பந்தம் முடிவான உடனேயே ஜெட் போர் விமானங்கள் உள்ளிட்ட விமானங் களை தயாரிப்பதில் 60 ஆண்டுகள் நீண்ட அனுபவம் வாய்ந்த, அரசுக்குச் சொந்தமான ஹிந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் லிமிட்டட் நிறுவனம் அகற்றப் பட்டிருக்கிறது என்பது தெரிய வந்துள்ளது. அதற்குப்பதிலாக, இந்த ஒப்பந்தத்தின்படி இந்தியப் பாதுகாப்புத் துறையில் முதலீடு செய்யப்பட வேண்டிய அந்த ஒட்டுமொத்த 30,000 கோடி ரூபாயும் இப்போது டசால்ட் நிறுவனத்துக்கும், விண்வெளியில் (Aerospace) மற்றும் பாதுகாப்பு உபகரணங்களில் முன் அனுபவம் மற்றும் நிபுணத்துவம் ஏதுமற்ற இந்தியத் தொழில் அதிபர் அனில் அம்பானியின் ரிலையன்ஸ் ஏரோ–ஸ்ட்ரக்சர்ஸ் நிறுவனத்திற்கும் இடையே 49க்கு 51சதவீதம் கொண்ட கூட்டு முயற்சியில் ஏற்படுத்தப் பட்டுள்ள டசால்ட் ரிலையன்ஸ் ஏரோஸ்பேஸ் அமைப்பு வழியாக திருப்பிவிடப்படும். மேலும், அனில் அம்பானியுடன் டசால்ட் ஒப்பந்தம் கையொப்பமான நேரத்தில் அனில் அம்பானி நடத்திக்கொண்டிருந்த கிட்டத்தட்ட அனைத்து நிறுவனங்களும் தீவிரக் கடனில் இருந்தன. அவரது மூத்த சகோதரர் முகேஷ் அம்பானிக்குச் சாதகமாக அனில் அம்பானி தனது தொலை தொடர்பு நிறுவனங்களிலிலான முதலீட்டைத் திரும்பப்பெற்று அவருக்கு நாவி மும்பையிலுள்ள 125 ஏக்கர் நிலம் உள்ளிட்ட ரூபாய் 35,000 கோடி மதிப்பிலான சொத்துக்களை மாறுதல் செய்தவை அதில் அடங்கும். மற்றொரு ஏகபோகக் குடும்பமான அதானி குழுமத்திற்குச் சாதகமாக அனில் அம்பானி குழுமம் அதன் உட்கட்டமைப்புத் திட்டத்தில் (Infra structure) முதலீட்டைத் திரும்பப்பெற்றது ரூபாய். 18,800 கோடிகளாகும். அவரது அல்ட்ரா மெகா ரிலையன்ஸ் பவர் நிறுவனம் அது தனது உற்பத்தியைத் தொடங்குவதற்கு முன்னரே சரிந்துபோனது.

அனில் அம்பானி குழுமம்தான் நாட்டின் ஆகப்பெரும் கடன் நிறைந்த நிறுவனம் என அறியப்படுகிறது. நாட்டைவிட்டுத் தப்பியோடிய விஜய் மல்லையா, நீரவ் மோடி மற்றும் மெகல் சோக்சி ஆகியவற்றோரின் மொத்தக்கடனைவிட இது மிகப்பெரியதாகும். அனில் அம்பானியின் கடன் தோராயமாக மொத்தத்தில் 1,00,000 கோடிகள் இருக்கும் எனக் கூறப்படுகிறது. ஆக, எந்தவொரு லாபநோக்கு நிறுவனத்தின் முழுக்க முழுக்க வியாபார நோக்கக் கண்ணோட்டத்தில் பார்த்தாலும் கூட, இத்தகைய முடிவானது வெளிப்படையாகச் சாத்தியமற்றதாகும்.

பின் எப்படி டசால்ட் நிறுவனம் கடுமையான கடன் சுமையில் உள்ள, அனுபவம் இல்லாத இந்திய நிறுவனத்தைத் தேர்வு செய்து பாதுகாப்புத் துறையில் அத்தகைய முதல் முயற்சியில் இறங்க முடிந்தது? இந்திய அரசாங்கத்தின் ஒருவகை யிலான மறைமுகமான நிர்ப்பந்தமும், ராஜாங்க ரீதியிலான அழுத்தமும் இருப்பதற்கான சந்தேகம் எழுவதற்கு உறுதியான காரணம் உள்ளது. மேலும், இத்தகைய கூட்டு முயற்சி வாயிலாக டசால்ட் ஏவியேசன் நிறுவனமானது இந்தியாவில் ஒற்றை இடத்தில் மிகப்பெரும் பாதுகாப்புத்துறை நேரடி

தொடர்ச்சி 2ம் பக்கம்

## எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்)இன் 3வது கட்சி காங்கிரஸை வெற்றிபெறச் செய்வோம்!

### திறந்தவெளிக்கூட்டம்

நவம்பர் 26, 2018 ஜாம்ஷெட்பூர், ஜார்க்கண்ட்

சிறப்புரை: தோழர் **பிரவாஸ் கோஷ்**
(பொதுச்செயலாளர்)

உரையாற்றுவோர்: தோழர் **சத்யவான்**
(மத்தியக் கமிட்டி உறுப்பினர்)

தோழர் **ராதாகிருஷ்ணா**
(மத்தியக் கமிட்டி உறுப்பினர்)

**பிரதிநிதிகள் அமர்வு**

**நவம்பர் 21-25, 2018**

**காட்ஷிலா, ஜார்க்கண்ட்**

## ரஃபேல் போர் விமான ஒப்பந்தச் சர்ச்சை

# முக்கியமான பாதுகாப்புத்துறையில் ஊழல் மிக ஆழமாக ஊடுருவியிருக்கிறது

1ம் பக்கத் தொடர்ச்சி

அந்நிய முதலீடான கிட்டத்தட்ட 100 மில்லியனுக்கும் மேலான யூரோவைப் புகுத்திடத் திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான தனது பங்கு நிதியை அனில் அம்பானி எப்படிச் செலுத்த முடியும்? ஏராளமான கேள்விகளும் சந்தேகங்களும் எழுகின்றன. இழப்பீட்டுச் செலவினத் தொகையான 30,000 கோடி ரூபாய்களில் 21,000 கோடிகளுக்கும் மேலாக ஏதோவொரு வழியில் ரிலையன்ஸ் நிறுவனம் பெறுவதில் அது சென்று முடியும் என அறிக்கைகள் கூறுகின்றன. ஆனால் விஷயம் இத்தோடு முடிய வில்லை. மேலும் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் உத்தேசிக்கப்பட்டிருக்கும் கூட்டு முயற்சிக்கான இடம், வரி விலக்கு, பெயரளவிலான செலவில் தண்ணீர் வசதி மற்றும் மின்சாரம் கிடைக்கப்பெறுதல், வழக்கமான சுங்கச் சோதனை இல்லாமை, உற்பத்தி செய்வதற்கான உரிமம் இல்லாமை மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக தொழிலாளர் சட்டங்களைக் கடைபிடிக்க வேண்டிய கடமை இல்லாமை ஆகியன வழங்கப்படுவதில் அது சென்று முடியும். இத்தகைய அனைத்து பலன்களுடனான தொகையானது ரூபாய் 45,000 கோடிகளுக்கும் மேலானதாக இருக்கும் என சிலர் வாதிடுகின்றனர்.

பெட்ரோல்–டீசல் மீதான சமீபத்திய கலால்வரி உயர்வு உள்ளிட்ட அதிகரித்துவரும் வரிச்சுமையால் பாடுபடும் வெகுஜனங்கள் முதுகொடிந்து கிடக்கை யில், குதூகலத்துடன் வங்கிக்கடன்களைச் செலுத்தாமலிருக்கும், தொழில் திட்டங்களுக்கு முதலீடு செய்வதற்கு (இன்னும் துவக்கப்படாத, உத்தேசிக்கப்பட்டிருக்கும் ரிலையன்ஸ் பவர் நிறுவனத்திற்காக ஐபிஓ தடவழி மூலமாக (IPO Route- Initial Public Offer Route) பங்குச்சந்தை மூலம் பொதுமக்களிடமிருந்து ஒரு வானளாவிய தொகை யான 190 மில்லியன் டாலர்கள், அதாவது ரூபாய் 1,330 கோடிகள் பெறப்பட்டுள்ளன) வரிகள் மூலம் பொதுமக்களிடமிருந்த பெறப்பட்ட பணத்தை தவறாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கும் முன்னணி ஏகபோகக் குடும்பங்கள் பல்வேறு தள்ளுபடிகள், சலுகைகள் மற்றும் புதிய கடன்கள் வழங்குதல் மூலம், பெரும்பாலும் நியதிகளையும் விதிமுறை களையும் மீறி காப்பாற்றப்பட்டுக்கொண்டிருப்பது மட்டுமின்றி அவைகளுக்கு தந்திரமான முறையில், மர்மமான அந்நிய நாட்டுடனான கூட்டு முயற்சி யில், அதுவும் பாதுகாப்புத்துறையில் இறங்குவதற் கும்கூட உதவி செய்யப்படுகின்றது.

இது ஒரு பூர்ஷ்வா நாட்டின் ராணுவம், பாதுகாப்புத் தொழில் துறை, அரசாங்கம் மற்றும் தொழில் குடும்பங்கள் ஆகியவற்றுக்கிடையேயான ஓர் நேர்மையற்ற உறவைக் கொண்டுள்ள 'ராணுவ–தொழில் கூட்டமைப்பு'தான் நாட்டை ஆண்டு கொண்டு, பொதுப்பனத்தின்மீது செல்வாக்கு செலுத்தும் அதிகாரம் படைத்தோரை பிரதிநிதித் துவப்படுத்திக்கொண்டு, வெறிபிடித்த மறுஆயுத மயமாக்கலில் (Rearmament) மற்றும் தொழிற் சாலைகளை ராணுவமயமாக்கலில் பிரதானமாக பொதுப்பணத்தை செலவிட்டுக்கொண்டும் இருக்கின்றது என்பதற்கான வெளிப்படையான உதாரணமாகும்.

### உண்மையை மறைப்பதற்காக வைக்கப்படும் மிதமிஞ்சிய, ஏற்கமுடியாத, முரணான வாதங்கள்

இருப்பினும், இதனை அப்பட்டமாக மூடி மறைக்க பாஜக அரசாங்கம் முன்வைத்திருக்கும் போலி வாதங்களுக்குப் பஞ்சம் ஏதுமில்லை.

முதலாவதாக, பேசி முடிக்கப்பட்ட விலை யானது முன்பிருந்த ஐக்கிய முன்னணி தலைமை யிலான காங்கிரஸ் அரசாங்கம் பேசி முடித்த விலையைவிட மிகவும் குறைவு எனவும், சரியான விலை பின்னர் வெளியிடப்படும் எனவும் கடந்த நவம்பர் மாதத்தில் பாஜக கூறியது. ஆனால் மார்ச் மாதம், அரசாங்கங்களுக்கிடையேயான ஒப்பந்த விதி 10 இன்படி ஒப்பந்த விலையை வெளியிடு வது மற்றும் பிற வகைப்படுத்தப்பட்ட தகவல் (Classified information) தடைசெய்யப்பட்டிருக்கிறது என மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜிய சபாவில் தெரிவித்தார். தேசியப் பாதுகாப்பு என்ற கண்ணோட்டத்தில் பார்க்கையில் போர் விமானங் களின் தொழில்நுட்பத் செயல்திறமை (Technical Cababilities) போன்ற வகைப்படுத்தப்பட்ட தகவல் களை ரகசியம் எனக் கருத முடியும். ஆனால், அந்த ஒப்பந்தத்தின் வணிக அம்சங்களை பாராளு மன்றத்தில் வெளியிட அரசாங்கத்தை எதுவும் தடுக்கவில்லை. இப்படியிருக்கையில் அவர்களின் வாதம் விந்தையான ஒன்றாக இருக்கிறது. உண்மையில், முந்தைய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கத்தின் இரண்டு அமைச்சர்கள் வெளியிட்டிருந்த ஆவணத்தில் அனில் அம்பானி யின் ரிலையன்ஸ் குழுமம் வெளியிட்ட ஒரு அறிக்கையைச் சுட்டிக்காண்பித்தனர். அதில் குறிப்பிட்டுள்ளபடி ஒரு ஜெட் போர் விமானத்தின் புதிய விலை ரூபாய் 1,660 கோடிகள் ஆகும்.

இரண்டாவதாக, ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக் கமிட்டியில் (CNC- Contract Negotiations Committee) அங்கத்தினராக இருந்தவரும், பாதுகாப்புத்துறை அமைச்சகத்தில் முன்பிருந்த இணைச் செயலாளர் மற்றும் கையகப்படுத்துதல் மேலாளர் (Joint Secretary & Aquisition Manager) பொறுப்பில் இருந்தவருமான ஒருவர் இந்த ஒப்பந்தத்தின் தகுதி விலை (Benchmark Price) குறித்து கேள்விகள் எழுப்பியதுடன் அவர் தனது ஆட்சேபணையையும் பதிவு செய்துள்ளார் என்று கூறப்படுகிறது. அவர் எழுப்பிய முக்கிய ஆட்சேபனையானது, கிடப்பில் போடப்பட்ட 126 ரஃபேல் போர் விமானங்கள் வாங்கும் திட்டத்திற்கான தகுதி விலையைவிட, இந்த புதிய 36– ரஃபேல் ஒப்பந்தத்தில் பிரான்ஸ் நாட்டு போர் விமானம் வாங்குவதற்கான தகுதி விலையை அதிகமான நிர்ணயித்தது பற்றியதாகும்.

அவரது ஆட்சேபணைகளால் ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளிக்கும் அமைச்சரவைக் குறிப்பு தாமதப்பட்டதுடன், அவரது ஆட்சேபணைகள் பாதுகாப்பு அமைச்சகத்தின் மற்றொரு மூத்த அதிகாரியான டைரெக்டர் ஜெனெரல் (கையகப் படுத்துதல்) –ஆல் ஒதுக்கிவைக்கப்பட்ட பின்னரே அதன் கையொப்பமிடுதல் நடந்திருக்கிறது. ரஃபேல் ஒப்பந்தத்தின் ஒரு அங்கமாக உள்ள அந்தக் குறிப்பானது, தற்போது இந்த ஒப்பந்தத்தை ஆய்வு செய்யும் தலைமைக்கணக்காளர் மற்றும் ஆடிட்டர் ஜெனெரல் – சிஏஜி வசம் (CAG- Comptroller and Auditor General) இருப்பதாகவும், அவர் தனது அறிக்கையை டிசம்பரில் நடக்க விருக்கும் பாராளுமன்ற குளிர்காலத் தொடரில் சமர்ப்பிக்கவிருப்பதாகவும் கூறப்படுகிறது. ஊடகச் செய்திகளின்படி, சிஏஜி அறிக்கையானது, அத்தகைய ஆட்சேபணைக் குறிப்பைக் குறிப்பிடுவதுடன் எப்படி இத்தகைய ஆட்சேபணைகள் ஒதுக்கி வைக்கப்பட்டது எனவும் குறிப்பிடப்போவதாகக் கூறப்படுகிறது. இந்தக் குறிப்பு சம்மந்தமாக பாஜக அரசாங்கம் வாய்மூடியாக இருக்கிறது.

பாஜக அரசாங்கத்தின் அடுத்த வாதம் டசால்ட் நிறுவனத்திற்கு தனது கூட்டு முயற்சிக்கான பங்குதாரரை தேர்ந்தெடுக்கும் பிரத்தியேக உரிமை இருந்தது என்பதாகும். எந்த இழப்பீடு பங்கு தாரரையும் (Offset Partner) தேர்ந்தெடுக்க அரசாங் கத்தின் ஒப்புதல் தேவை என்கின்ற இழப்பீடு ஷரத்தின் வழிகாட்டுதலைச் சுட்டிக்காட்டி, விமர்சகர்கள் கேள்வியெழுப்பினர்.

மூன்றாவதாக, "இழப்பீடு ஒப்பந்தம் ஏதும் கையெழுத்தாகவில்லை" என மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் வாதிட்டார். ஆனால் ரிலையன்ஸ் மற்றும் டசால்ட் நிறுவனக் கூட்டு முயற்சித் திட்டமானது ஊடகச் செய்தி வெளியீடுகளில் அது பிரான்ஸ் நாட்டு இழப்பீடு கடமைகளை நிறை வேற்றிக்கொண்டிருக்கிறது எனத் தொடர்ந்து கூறிக்கொண்டிருக்கின்றது. உண்மையில் நாக்பூர் சர்வதேச விமான நிலையம் அருகாமையிலிருக்கும் மிகன் என்ற சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அமைந்துள்ள திருபாய் அம்பானி ஏரோஸ்பேஸ் பார்க் பகுதியில் டசால்ட் ரிலையன்ஸ் ஏவியேஷன் லிமிடெட்–இன் உற்பத்தி நிறுவனத்துக்கான அடிக்கல் கடந்த அக்டோபரில் பாஜக வைச்சேர்ந்த மத்திய அமைச்சர் நிதின் கட்கரி, மகாராஷ்டிர பாஜக முதலமைச்சர் தேவேந்திர பட்நாவிஸ் மற்றும் பிரான்ஸ் நாட்டுப் பாதுகாப்புத்துறை அமைச்சரான ஃப்லோரென்சி பார்லி ஆகியோர் முன்னிலையில் நாட்டப்பட்டது.

போர் விமானங்கள் தயாரிக்கும் அனுபவம் இல்லாததால் ஹெச்ஏஎல் நிறுவனம் அந்த ஒப்பந்தத்திற்குத் தகுதியற்றதாக இருந்தது எனக் கூறி பாஜக அரசாங்கம் இந்த ஒப்பந்தத்தை நியாயப்படுத்த மேலும் முயற்சித்தது. ஆனால் 2018 ஆகஸ்டு 31ஆம் தேதிவரை ஹெச்ஏஎல்லின் தலைமைப் பொறுப்பிலிருந்த டி ஸ்வர்ணா ராஜூ அவ்வாதத்திற்கெதிராக வெளிப்படையாகக் கேள்வியெழுப்பினார். உண்மையை வெளியே கொண்டுவரும் அந்த கோப்புகளை மத்திய அரசாங்கம் மக்கள் முன்பாக ஏன் வைக்கவில்லை என்றும் கேட்டார். விமானப்படையின் முக்கிய அங்கமாக இருக்கின்ற 25– டன் சுக்கோய்–30 என்ற ஒரு நான்காம் தலைமுறை ஜெட் போர் விமானத்தை மூலப்பொருள் நிலையிலிருந்து ஹெச்ஏஎல் நிறுவனம் தயாரிக்க முடிகையில், பின்னர் எப்படி ஹெச்ஏஎல்லின் திறமை குறித்து சந்தேகிக்கலாம் எனவும் குறிப்பிட்டிருந்தார். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் இருந்த போதே ஹெச்ஏஎல் நிறுவனம் இந்த ஒப்பந்தத்தி லிருந்து கைவிடப்பட்டது என கடந்த செப்டம்பர் மாதத்தில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் கூறியிருக்கிறார். ஆனால் உண்மை என்ன வெனில், பாஜக ஆட்சியில் இருந்தபோதுதான் ஏப்ரல் 2015இல் இந்தியா மற்றும் பிரான்ஸ் நாடுகளின் அரசாங்கங்களுக்கிடையேயான ஒப்பந்தமானது கையெழுத்திடப்பட்டிருக்கிறது.

கூட்டு முயற்சிக்கான இந்தியப் பங்குதாரரை டசால்ட் நிறுவனம் தேர்ந்தெடுக்கும் முடிவில் அரசாங்கத்திற்கு எவ்விதத் தொடர்பும் இல்லை என வாதிடுவது பாஜக அரசாங்கத்தின் மற்றுமொரு மழுப்பல் தந்திரமாகும். ஆனால் இந்த ஒப்பந்தம் இறுதிசெய்தபோது அதிகாரத்தில் இருந்த பிரான்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி திரு ஹோலன்டே, பிரான்ஸ் நாட்டு அரசாங்கத்திற்கு எவ்வித வாய்ப்பும் வழங்காமல் இந்திய அரசாங்கம் டசால்ட் நிறுவனத்திற்கான இழப்பீடு பங்குதாரராக அனில் அம்பானியின் பெயரை முன்மொழிந்தது என வெளிப்படையாக அறிவித்தார். பிரான்ஸ் நிறுவனங்களின் தொழில் பங்குதாரர்களை (Industrial Partners) இந்தியாவில் திட்டங்களுக்காக தேர்வு செய்வதில் "எந்த வகையிலும்" சம்மந்தப் படவில்லை என பிரான்ஸ் அரசாங்கம் மேலும் வலியுறுத்திக் கூறியது.

இந்த ஒப்பந்தம் 2015இல் பிரதமர் மோடிக்கும் பிரான்ஸ் ஜனாதிபதி ஹோலன்டே–க்குமிடையே ஒரு மூடிய அறைக்குள்ளான சந்திப்பின்போது நிறைவேறியது என்பதும்கூட ஊடகங்களில் வெளிவந்துள்ளது. பிரதம மந்திரி பிரான்ஸுக்கு விஜயம் செய்தபோது பாதுகாப்பு அமைச்சரோ அல்லது வெளியுறவுத்துறை அமைச்சரோ எவரும் உடன் செல்லவில்லை. அனில் அம்பானி மட்டுமே அவருடன் இருந்தார். ஒன்றுமறியாமல் உறக்கத்தில் இருந்த பாதுகாப்புத்துறை அமைச்சர் கடந்த செப்டம்பர் 24 அன்று டில்லியிலுள்ள பாஜக கட்சித் தலைமையகத்தில் ரஃபேல் உடன்படிக்கை குறித்து அதிகாரபூர்வமற்ற (Off-the-record) வகையில் பேசிக்கொண்டிருந்தபோது அங்கிருந்த இரண்டு பிரான்ஸ் நாட்டு பத்திரிகையாளர்களை வெளியேரக் கூறியதாகக் கூறப்படுகிறது. வெளிப் படையாக கதிகலங்கிப்போன பாஜக தலைவர் களும் அமைச்சர்களும் சுற்றிவளைத்துப் பேசிக் கொண்டு, தொடர்பில்லாத பிரச்சினைகளில் கவனத்தைத் திசைதிருப்பி அதன் முதன்மை பாராளுமன்ற எதிர்க்கட்சியான காங்கிரசுடன் கடுமையாகப் போரிட்டுக்கொண்டு பிரதானக் கேள்வியிலிருந்து தப்பித்து ஏமாற்றிட முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர்.

### காங்கிரசுக்கும் பாஜகவுக்கும் இடையிலான போலிச் சண்டை

காங்கிரஸ் ஆட்சிகாலத்திலும்கூட எண்ணற்ற சந்தேகத்திற்கிடமான ஒப்பந்தங்களும், பெரும் மோசடிகளும், நிதி முறைகேடுகளும் நடைபெற்றி ருக்கின்றன என்பது அனைவரும் அறிந்ததே.

தொடர்ச்சி 3ம் பக்கம்

## ரஃபேல் போர் விமான ஒப்பந்தச் சர்ச்சை

# ஊழல் நிறைந்த தொழில்–ராணுவக் கூட்டமைப்புதான் உண்மையில் நாட்டை ஆட்சிபுரிகின்றது

2ம் பக்கத் தொடர்ச்சி

பாஜக, காங்கிரஸ் ஆகிய இரண்டுமே ஆளும் ஏகபோகவாதிகளின் நம்பிக்கைக்குரிய பிரதிநிதிகளேயாகும். அவை ஒன்றுக்கொன்று போட்டியிட்டுக்கொள்வது ஆட்சியைப் பிடிப்பதற்காக மட்டுமே. முதலாளித்துவ அமைப்பு அதன் சாகும் தருவாயில் உள்ளதால் அது முற்றிலும் ஊழல் மிகுந்ததாக ஆகி, முழுக்க முழுக்க மக்கள்விரோத மற்றும் அடிப்படையில் பிற்போக்காக ஆகியிருப்பதால், காங்கிரஸ் கட்சியானாலும் சரி, அல்லது பாஜக கட்சியானாலும் சரி, அல்லது பூர்ஷ்வா வர்க்க நலனுக்கு அடிபணிந்து அதைப் பாதுகாக்கும் எந்தக் கட்சியானாலும் சரி, இவையாவும் ஊழல், மோசடி செயல்பாடுகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் செய்வதிலிருந்து விலகியிருக்க முடியாது. ஆனால் விஷயம் என்னவெனில் காங்கிரஸ் அரசாங்கம் செய்த தவறுகளைச் சுட்டிக்காண்பித்து பாஜக அரசாங்கம் தான் செய்திருக்கும் ஒட்டுமொத்த முறைகேடுகளை நியாயப்படுத்திட முடியாது.

இது போன்றே காங்கிரசும் எவ்வித் கொள்கை அல்லது அறநெறி நிலைபாட்டிலிருந்து இல்லாமல் மக்கள் மனநிலையை தனக்கு ஆதரவாக மாற்றி, வெறுமனே தேர்தல்களில் ஓட்டு வங்கியைப் பெறுவதற்காக, சந்தேகத்திற்குரிய ஆயுத ஒப்பந்தத்திற்கு எதிராகவும், முன்னணி ஏகபோகக் குடும்பங்களுக்கு தகுதியற்ற பலன்கள் சென்றடைந்திருப்பதற்கு எதிராகவும்கூட அதன் எதிர்ப்பை இப்போது அதிகரித்துக்கொண்டிருக்கிறது. ரஃபேல் ஒப்பந்தம் குறித்து காங்கிரசுக்கும் பாஜகவுக்குமிடையே இப்போது நடந்துகொண்டிருக்கும் போட்டியானது பொதுமக்கள் நுகர்வுக்கான போலிச் சண்டையேயன்றி வேறொன்றுமில்லை.

### அனைத்திலும் பரவியிருக்கும் ஊழல், பிற்போக்கு முதலாளித்துவத்தின் அடையாளம்

முதலாளித்துவம் ஒரு உலக அமைப்பாக காலாவதியாகிக்கொண்டு, பிற்போக்கானதாகிக்கொண்டு, பரவலாக எங்கும் வியாபித்திருக்கும் ஊழல் அதன் முத்திரையாக ஆகிவிட்டது என்பதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும். பெரும் எண்ணிக்கையில் வெளிவந்துகொண்டிருக்கும் போபர்ஸ் ஊழல், கார்கில் சவப்பெட்டி ஊழல், அகஸ்டா வெஸ்ட்லேண்ட் ஊழல், ஆதர்ஷ் குடியிருப்பு ஊழல், இப்போது ரஃபேல் ஊழல் போன்ற மோசடிகளெல்லாம் முதலாளித்துவ இந்தியாவில், பாதுகாப்புத்துறை ஊழலின் கூடாரமாகிவிட்டது என்பதையே நிரூபிக்கின்றன. ஆயுதங்களை வாங்குவதற்கும் தயாரிப்பதற்கும் மத்திய பட்ஜெட்டில் 12 சதவீதத்திற்கும் மேலாக ஒதுக்கி, லட்சக்கணக்கான கோடி ரூபாய்களை இந்திய அரசாங்கம் பாதுகாப்புக்காக செலவிட்டுக்கொண்டிருக்கிறது. முன்னதாக ஆயுதங்கள் தயாரிப்பது அரசாங்கத்துறையின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஆனால் பேரழிவுமிக்க உலகமயமயம்–தாராளமயம்–தனியார்மயக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தியதைத் தொடர்ந்து, பாதுகாப்புத்துறை போன்ற இத்தகைய பிரதான மற்றும் முக்கியத்துறை, தனியார் நிறுவனங்களுக்கு, அதாவது மிகப்பெரும் ஏகபோகக் குடும்பங்களுக்குத் திறந்துவிடப் பட்டிருக்கிறது. பாஜக அரசாங்கமானது இத்திசையில் மேலும் ஒருபடி சென்று இந்தியாவில் தனியார் ஆயுதத் தயாரிப்புக்கான ஓர் சுற்றுச்சூழலை உருவாக்கி வளர்த்தெடுக்கும் நோக்கத்துடன், ஆயுத உற்பத்திக்கான ஒரு 'மூலோபாய பங்குதாரர்' (Strategic Partner) கொள்கையை வெளியிட்டிருக்கிறது. ஆயுத உற்பத்தித் தொழிற்சாலைகள் என்பது அதிகம் விளம்பரப் படுத்தப்பட்ட 'மேக் இன் இந்தியா' முழக்கத்தின் மையமாக இருக்கும் என அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

தேர்வு செய்யப்பட்ட இந்திய நிறுவனங்களுடனான மூலோபாய பங்குதாரர்கள் எனும் ஆயுத உற்பத்தியில் முக்கியத்துவம் வாய்ந்த தனியார் துறை பங்களிப்பு அத்தியாவசியமானது எனக் கூறப்படுகிறது. அதுமட்டுமல்ல, 2016இல் பாஜக அரசாங்கமானது "அடிப்படைத் தாராளமயம்" (Radical Liberalisation) என்றழைக்கக்கூடிய அந்நிய நேரடி முதலீடு ஆட்சியை (Foreign Direct Invesment -FDI Regime) அறிவித்தது. அதன் போர்வையில், எண்ணற்ற முக்கியத்துறைகள், குறிப்பாக பாதுகாப்புத்துறையானது எளிதான விதிமுறைகளுடன் 100% அந்நிய நேரடி முதலீட்டைக்கொண்ட முற்றிலுமான அந்நிய உரிமை திறந்துவிடப்பட்டுள்ளது. நாட்டின் பாதுகாவலர்களாக, ஆட்சியாளர்களாக இருக்க வேண்டிய உயர்மட்ட ராணுவ அதிகாரிகள், அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் அந்நிய நேரடி முதலீடு இல்லாத நிலையிலேயே பல்வேறு அச்சுறுத்தும் நிகழ்வுகளில் சம்மந்தப்பட்டிருந்ததை ஏற்கனவே இந்நாடு அனுபவத்தில் கண்டிருக்கிறது. இத்தகைய ஒப்பந்தங்கள் மற்றும் கொள்முதல்கள் மூலம் தனிப்பட்ட ஆதாயங்களை அடைந்துள்ளதாக அமைச்சர்களும் குற்றஞ்சாட்டப் பட்டிருக்கின்றனர்.

பாதுகாப்புத்துறையில் அந்நிய நேரடி முதலீடு அதிகரிப்பு என்பது ஆயுத ஒப்பந்தங்கள் அரங்கில் பரந்த அளவிலான ஊழலை, லஞ்ச லாவண்யத்தை ஐயத்திற்கிடமின்றி விரிவாக்கியிருக்கிறது. பாதுகாப்புத்துறையில் முற்றிலும் ஊழல் மிகுந்த தொழில்–ராணுவ–கூட்டமைப்பின் (Industrilal-military complex) கைதான் இப்போது ஓங்கியிருக்கிறது. ஏகபோவாதிகளின் பணம் ஈட்டும் மற்றும் அதிகபட்ச லாபத்தை ஈட்டும் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, அரசங்கமானது குதூகலத்துடன் தன் இஷ்டத்திற்கு சட்டங்களை வளைக்கவும், மாற்றவும் அல்லது உருவாக்கவும் செய்கின்றது. ஏகபோகக் குடும்பங்களும் அதற்குக் கைமாறாக, ஆட்சியில் அமர வைக்கவும் ஆட்சியதிகார அரங்கில் இருந்துகொண்டிருக்கவும் பணரீதியிலும் அரசியல் ரீதியிலும் பாஜக, காங்கிரஸ் போன்ற ஆளும் பூர்ஷ்வா கட்சிகளுக்கு ஆதரவளித்து வருகின்றன. இது ஒரு வெறும் கொடுக்கல் வாங்கல் ஏற்பாடுதான். இதன் போக்கில் மேலும் மேலும் துயரத்தில் ஆழ்ந்துவரும் மக்களின் இறுதித்துளி ரத்தத்தையும் ஒட்ட உறிஞ்சியெடுப்பதன் மூலம் திரட்டப்பட்ட பொதுப்பணம் அப்பட்டமாகக் கொள்ளையடிக்கப்படும். ரஃபேல் ஊழல் அதன் அப்பட்டமான வெளிப்பாடாகும்.

### பாதுகாப்புத்துறைக்குக் கொடுக்கப்படும் மிகுந்த அழுத்தம்

பெரும் எண்ணிக்கையில் செத்து மடிந்து கொண்டும், உயிர் ஊசலாடிக்கொண்டும், பிச்சைக்காரர்களாகிக்கொண்டும், நோய்வாய்ப் பட்டுக்கொண்டும் மற்றும் தற்கொலைகள் புரிந்துகொண்டும் இருக்கின்ற ஒரு நாட்டில் இந்திய அரசாங்கமானது ராணுவ பலத்தை அதிகரித்துக்கொண்டிருக்க 3 லட்சம் கோடி ரூபாய்களுக்கும் மேலாக, அதாவது அதன் பட்ஜெட்டில் 12.5 சதவீதத்தை செலவிட்டுக் கொண்டிருக்கின்றது என்பதைக் குறிப்பிடுவது இங்கே பொருத்தமாக இருக்கும்.

எப்போதும் அதிகரித்துக்கொண்டிருக்கும் காட்டுமிராண்டித்தனமான நிதிச்சுமையால், தொடர்ந்துகொண்டிருக்கும் அசுரத்தனமான அத்தியாவசியப் பண்டங்களின் விலை உயர்வால், பெருகிவரும் வேலையின்மையால், திடீர் திடீரென நடைபெறும் ஆட்குறைப்பு மற்றும் வேலையிழப்பால், கடுமையான ஊதிய வெட்டால் மற்றும் இதுபோன்ற ஈவிரக்கமற்ற பொருளாதாரத் தாக்குதல்களால் ஒட்ட உறிஞ்சப்பட்டுக்கொண்டிருக்கும், வறிய நிலையிலிருக்கும் கோடான கோடி அடித்தட்டுக் குடிமக்களுக்கு அதிக பட்ச நிவாரணம் வழங்கக்கூடிய அவசரத் தேவை இருக்கையில், போர் மற்றும் நாட்டின் பாதுகாப்புக்கு உடனடி ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்ற அச்சத்தை எழுப்பி, நாட்டின் பாதுகாப்புத்தேவை என்றழைக்கக்கூடிய ஒன்றுக்கு ஒட்டுமொத்த ஆதாரங்களை திருப்பி விடுவது எப்படி அரசாங்கத்தின் முன்னுரிமையாக இருக்க முடியும்?

நாகரிக அரசாங்கம் என்றழைக்கக்கூடிய எதுவும் செயற்கையாக தூண்டப்பட்ட போர் அச்சத்தை பூச்சாண்டி காட்டி மக்களின் நியாயமான, குறைந்த பட்சத் தேவைகளைக்கூட மறுக்குமா? உண்மையில், தூண்டப்பட்டிருக்கும் போர் மனப்பான்மையே நாட்டினுள் அமைதியையும் ஒற்றுமையையும் பராமரித்திடுவதற்குக் கேடு விளைவிக்கும். நாட்டு மக்களின் கொழுந்துவிட்டு எரியும் நாட்டுப்பற்றே சுதந்திரத்தையும் இறையாண்மையையும் பாதுகாக்கக்கூடிய இறுதியான உத்திரவாதத்தைத் தரும் என்பதும், ஊழல் மிகுந்த கூலிப்படை ராணுவம் அதைத் தராது என்பதும்தான் வரலாறு கற்றுத்தந்துள்ள பாடமாகும். பின்னர் ஏன் ராணுவ வல்லமையை அதிகரிக்க வேண்டிய அவசரத்தேவை உள்ளது? விவாதத்துக்குரிய கேள்வி இதுதான். இதற்கான விடையைக் கண்டுபிடிப்பது அத்தனை கடினம் இல்லை.

### ஆளும் பூர்ஷ்வாக்களின் வர்க்க நிர்ப்பந்தம் மக்களின் பிரச்சினைகளையும் நலன்களையும் புறக்கணிக்கிறது

உலகம் முழுவதிலும், ஏகாதிபத்தியம்–முதலாளித்துவமானது முதலாளித்துவமே உருவாக்கியிருக்கும் என்றுமில்லாத மற்றும் தீர்க்கமுடியாத ஓர் சந்தை நெருக்கடியில் மூழ்கியுள்ளது. ஓய்வொழிவற்ற முதலாளித்துவ சுரண்டலால் மக்களின் வாங்கும் சக்தி வேகமாக வீழ்ந்துவருவதால், சந்தை பெருமளவில் தொடர்ச்சியாகச் சுருங்குகிறது. இத்தகைய சூழ்நிலைமையில், எப்படியாவது நெருக்கடியைத் தவிர்த்திட, ஆளும் ஏகாதிபத்திய–முதலாளித்துவ

தொடர்ச்சி 4ம் பக்கம்

## புதுச்சேரி

# செப்டம்பர் 10, 2018 பொது வேலைநிறுத்தம்




புதுச்சேரியில் பொது வேலைநிறுத்தத்தை வெற்றிபெறச் செய்ய கோரி நடைபெற்ற பிரச்சார இயக்கத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தயாரிப்புக் கமிட்டி செயலாளர் தோழர் லெனின்துரை உரையாற்றுகிறார். செப்டம்பர் 10 அன்று 4 இடங்களில் தோழர்கள் மறியலில் ஈடுபட்டனர்

## ரஃபேல் போர் விமான ஒப்பந்தச் சர்ச்சை

# சக்திவாய்ந்த விழிப்புணர்வுமிக்க ஒன்றுபட்ட மக்கள் இயக்கம் மட்டுமே இதைத் தடுத்து நிறுத்த முடியும்

3ம் பக்கத் தொடர்ச்சி

நாடுகளின் ஏகபோகவாதிகள் யூகவணிக மூலதனச் சந்தையில் நிதியைச் செலுத்துதல் மற்றும் பொருளாதாரத்தை ராணுவமயமாக்கலை நோக்கிக் கொண்டு செல்லுதல் போன்ற வேறு வகையிலான வழியை நாடுகின்றனர். அவர்களின் இறுதி இலக்கான நெருக்கடியில் மூழ்கியுள்ள சந்தையை தூண்டிவிடுவதும், எப்படியாவது முதலாளித்துவப் பொருளாதாரத்தை உருண்டோட வைக்கவும் அவர்களுக்கு இது கட்டாயமாக இருக்கிறது. ஆளும் இந்திய பூர்ஷ்வாக்கள் அவர்களின் அடிவருடி அரசாங்கங்கள் மூலம் மிகச்சரியாக அதே பாதையை நோக்கித்தான் நடைபோட்டுக் கொண்டிருக்கின்றன.

பொருளாதார ராணுவமயமாக்கல் திட்டத்தில் பாதுகாப்புத்துறையில் அந்நிய நேரடி முதலீடு என்பது ஒரு பங்கும் பகுதியுமாக இருப்பதால், உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தீவிர மந்தநிலை மற்றும் சந்தைநெருக்கடி மிகுந்த இன்றைய நாட்களில் அனைத்து முதலாளித்துவ நாடுகளும் வேறு வழியின்றி அதை மேற்கொள்கின்றனர். வேகமாக நடைபெறும் ஆயுத உற்பத்தியின் அடிப்படையில் ஆயுதத் தளவாடங்கள் விற்பதற்கான ஓர் சர்வதேசச் சந்தை உருவாக்கப் படுகிறது. ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதிக்கான ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கையின்படி, (Stockholm International Peace Research Institute-SIPRI) *2012*லிருந்து *2017* வரையிலான உலகின் மொத்த ஆயுத இறக்குமதியில் இந்தியா *12%* இறக்குமதி செய்துள்ளது. உலகிலேயே இது ஆக அதிகமானதாகும். ஆக, உள்நாட்டு மற்றும் அந்நிய ஏகபோகக் குடும்பங்கள் யாவும் இந்தியாவில் ஆயுத உற்பத்தி செய்வதில் மூலதனத்தைச் செலவிட ஆர்வம் காட்டுவது மட்டுமின்றி, முன்பும் இப்போதும் உள்ள பூர்ஷ்வா அரசாங்களுடன் தந்திரமாக வடிவமைக்கப்பட்ட ஆயுத ஒப்பந்தங்கள் வாயிலாக பணம் ஈட்டவும் செய்கின்றனர்.

'தேசியவாதம் மற்றும் தேசப்பற்று' –க்கான ஒரே உரிமையாளர் என தன்னைப் பறைசாற்றிக் கொள்ளும் பாஜக அரசாங்கமானது, அமெரிக்க ஏகாதிபத்தியம் மற்றும் அதன் பகாசுர போர் வியாபாரிகளான பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட மிகப்பெரும் ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு வழிவகுத்து, ரசியமான மற்றும் முக்கியமான பாதுகாப்புத்துறையில் தீர்மானகரமான பாதையைத் திறந்துவிட்டு அதன் மூலம் நாட்டின் இறையாண்மைக்கு இல்லாவிட்டாலும் நாட்டின் பாதுகாப்புக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைக் காணலாம். அனைத்து ராணுவ ரகசியங்களுடன் ஒட்டுமொத்த பாதுகாப்புத்துறையையும் அவர்களுக்குத் திறந்துவிட்டிருப்பதால், படைக்கலன்களின் அணிவகுப்பு மற்றும் நாட்டின் ராணுவம் சம்மந்தப்பட்ட பிற ரகசியத் தகவல்கள் யாவும் இனி அவர்கள் கையில் இருக்கும். இந்திய மக்களுக்கு எதிரான, தேவைப்பட்டால் இந்திய அரசாங்கத்துக்கு எதிரான கண்காணிப்பு, ஊடுருவல் மற்றும் நாசவேலை புரிவதற்காக அந்நிய முதலீடு செய்யப்பட்ட உள்நாட்டு நிறுவனங்களைப் பயன்படுத்த முடியும். அந்நிய நாட்டுக் கூட்டுடன் வெறுமனே நவீன ஆயுதங்களை வாங்குவதும் அல்லது விற்பதும், அதே நேரத்தில் இறக்கையில்லா கழுகுகளான ஆயுத வியாபாரிகள் மற்றும் பகாசுர பன்னாட்டு நிறுவனங்களின் பணப்பெட்டியை கொழுக்கச்செய்து தேசியப் பாதுகாப்புக் கேள்வியுடன் குற்றத்தண்டனைக்குரிய இத்தகைய சமரசத்தை செய்வது, நாட்டை எதிரிகளிடம் விற்பதற்குச் சமமானதாகும்.

பொருளாதார நிர்ப்பந்தத்துடன் ஆளும் இந்திய பூர்ஷ்வாக்களுக்கு ஒரு அரசியல் நிர்ப்பந்தமும் கூட இருக்கிறது. ஆளும் இந்திய முதலளித்துவ வர்க்கம் ஏகாதிபத்தியக் குணாம்சத்தை அடைந்து அது ஒரு பிராந்திய வல்லரசாக உருவாக விரும்புகிறது என்பதை அரசியல் பொருளாதாரம் அறிந்த ஒவ்வொரு மாணவரும் அறிவர். எனவே, அது நிதிப்பலத்துடன் தனது ராணுவ பலத்தையும் பறைசாற்ற வேண்டியிருக்கிறது. அதே நேரம், ராணுவமயப்படுத்தப்பட்ட பொருளாதாரக் களத்தில் ஒத்துழைப்பு நல்குவது மூலம் அமெரிக்கா துவங்கி, ஏகாதிபத்திய வல்லரசுகளை நண்பர்களாக்கிக்கொண்டு, அதைப் பயன்படுத்தி அவைகளிடம் சில சலுகைகளைக் கைப்பற்றிக் கொள்ளும் மற்றும் வேறு இடங்களில் அவை நிதி மூலதனத்தை முதலீடு செய்வதற்கான களத்தை அந்நியச் சந்தைகளில் ஏற்படுத்திக் கொள்ளும் மற்றும் பிற நாடுகளுக்கு ஆயுதங்கள் உள்ளிட்ட பொருட்களை விற்பனை செய்வது போன்ற சாதகங்களைப் பெறவேண்டிய தேவையும் இருக்கிறது. இந்த நோக்கத்திற்காக, இந்திய பூர்ஷ்வா அரசாங்கமானது ஏகாதிபத்திய வல்லரசுகளுடன் வழக்கமான கூட்டு ராணுவப் பயிற்சிகளை மேற்கொள்கிறது. சுருக்கமாகக் கூறினால், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் இன்னும் பல ஏகாதிபத்திய சக்திகளுடன் தீவிர நெருக்கம் காட்டிடவும், குறிப்பாக பொருளாதார உடன்பாடுகளை, அணு ஒப்பந்தங்களை மற்றும் பாதுகாப்பு உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொள்ள ஆளும் இந்திய ஏகபோகவாதிகளை நிர்ப்பந்திப்பது இதுதான்.

மாபெரும் லெனின் ஒருமுறை கூறினார்: " . . . ஏகபோகத்துக்கு முந்தைய முதலாளித்துவம் அதன் உச்சத்தை உண்மையில் *1870*களிலேயே அடைந்துவிட்டதன் காரணம் –ஒப்பீட்டளவில் பேசுவதானால், அமைதிக்கும் சுதந்திரத்திற்குமான அதிகபட்ச ஆர்வத்தின் வேறுபடுத்திப்பார்க்கக் கூடிய, மிகவும் பிரத்தியேகமான வெளிப்பாடாக இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் காணப்பட்ட அதன் அடிப்படைப் பண்புகளின் காரணமாகவே. இதற்கு மாறாக, இறுதியில் *20*ஆம் நூற்றண்டில் தான் ஏகாதிபத்தியம், அதாவது ஏகபோக முதலாளித்துவம் வளர்ச்சியுற்றது, அமைதிக்கும் சுதந்திரத்திற்குமான குறைந்தபட்ச ஆர்வம் மற்றும் அதிகபட்சமான மற்றும் அனைத்திலுமான ராணுவமய வளர்ச்சியினால் வேறுபடுத்திப் பார்க்க முடிகின்ற அதன் அடிப்படைப் பண்புகளின் காரணமாகவே. (ஆதாரம்: பாட்டாளிவர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுட்ஸ்கியும்) முதலாளித்துவமானது இன்று வரலாற்று ரீதியில் தவிர்க்கவியலா விதியின் காரணமாக அது இப்போது தனது மரணப்படுக்கையில் இருந்துகொண்டு உயிர்வாழ்ந்திட அனைத்து அறநெறியற்ற, ஒழுக்கநெறியற்ற மற்றும் கொடுங்கோல் வழிமுறைகளை தீவிரமாகக் கடைபிடித்துக் கொண்டும் ஊழலைப் பிரதான பற்றுக்கோலாகப் பயன்படுத்திக்கொண்டும் இருப்பதை அன்று தீர்க்கதரிசனமாகக் கூறியது இன்று எப்படி நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கலாம்.

### வாழ்வின் மீதும் வாழ்வாதாரத்தின் மீதும் தொடுக்கப்பட்டிருக்கும் தாக்குதலை முறியடித்திட மக்கள் கிளர்ந்தெழுந்தாக வேண்டும்

ஆட்சியதிகாரத்தின் உயர்மட்ட அளவில் தங்குதடையின்றி தொடர்ச்சியாக அதிகரித்துவரும் இத்தகைய ஊழலின் காரணமாக, பொருளாதார ரீதியிலும் சமூகரீதியிலும், தார்மீகரீதியிலும் மற்றும் கலாச்சாரரீதியிலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுக்கொண்டிருப்பவர்கள் பாடுபடும் சாமானிய மக்களே என்பது சொல்லாமலே விளங்கும். எனவே, அதிகரித்துவரும் அவர்களின் வறிய நிலைக்கும் துயரத்திற்கும், அத்துடன் நிறுவனப்படுத்தப்பட்டுள்ள ஊழலுக்கும் (Institutionalised Corruption) மற்றும் பூர்ஷ்வா வர்க்க நலனுக்கு அடிபணிந்து சேவை புரியும் கட்சிகள் மக்கள் நலன்களுக்கு இழைக்கும் கேடுகெட்ட துரோகத்திற்கும் பின்னாலிருக்கும் உண்மையை மக்கள் ஆய்ந்தறிந்து தேடிக்கண்டுபிடிப்பது கட்டாயமாகும்.

கடந்துபோகும் ஒவ்வொரு நாளும் வாக்கு அடைப்படையில் இயங்கும் பூர்ஷ்வா கட்சிகள், குறிப்பாக சிபிஐ(எம்) , சிபிஐ போன்ற போலி மார்க்சிஸ்ட் கட்சிகள் தேர்தல் நலனை முன்னிட்டு முன்னதாக பங்கெடுத்துக்கொண்டிருந்த சிறிதளவு போராட்டப்பாதையிலிருந்துகூட விலகிச் சென்று கொண்டிருக்கின்றனர். பதவி அதிகாரத்தை நோக்கிச் செல்வதை அவர்கள் தவிர்க்க இயலாதால், பாராளுமன்றத்துக்கு வெளியில் மட்டுமல்ல, இத்தகைய பெரிய அளவிலான நிதி மோசடிகள் மற்றும் ஊழல்களுக்கெதிராக பாராளுமன்றத்தினுள் குரலெழுப்புவதற்குக்கூட அவர்கள் முன்முயற்சி எடுப்பதில்லை. போஃபர்ஸ் ஊழலின்போதுகூட உரத்த சப்தம் எழுப்பப்பட்டது. ஆனால் இந்த ரஃபேல் ஊழலில் அதில் சிறிதளவுகூட காணப்படவில்லை. அனைத்து எதிர்ப்புகளும் அல்லது கருத்துவேறுபாடுகளும் வெற்று அறிக்கைகளை வெளியிடுவதில் அல்லது நாடகபாணியில் உரக்க வசைபாடுதலில் சென்று முடிந்துவிடுகின்றன.

ஆனால் இத்தகைய மோசமான விளையாட்டைக் கண்டு மக்கள் அமைதியாக இருந்தார்களேயானால், அதிகரித்துவரும் இந்த ஊழலை விதிவசமென்றும் அதற்குத் தீர்வேதும் கிடையாது என்று கருதினால், நிலைமை இன்னும் மோசமடையவே செய்யும். முதலாளித்துவம் மேலும் நெருக்கடியில் சிக்கிக்கொள்ளும். எண்ணற்ற திருடர்களும், ஒட்டுண்ணிகளும், மோசடிக்காரர்களும், ஊழல்வாதிகளும் மற்றும் ரத்தத்தை உறிஞ்சுவோர்களும் தண்டனையிருந்து தப்பித்துக் கொண்டு உலவிக்கொண்டிருக்கையில், பாடுபடும் கோடானகோடி மக்கள்தான் மேலும் மேலும் கசக்கிப் பிழியப்பட்டு வீசப்படுவார்கள். நிச்சயம் இது நடக்க அனுமதிக்கக்கூடாது. முதலாளித்துவம் இருந்துகொண்டிருக்கும்வரையில், போஃபர்ஸ் மற்றும் ரஃபேல் போன்ற ஊழல்கள் இன்னும் அதிக பரிமாணத்திலும் அதிக அளவிலும் நடக்கலாம் என்பது உண்மைதான். உரிய செயல்முறைப் போக்கின் தர்க்கரீதியான முடிவாக, அவசியமான நிபந்தனைகளைப் பூர்த்திசெய்வதன் மூலம், புரட்சிகரப் போராட்டத்தின் மூலம் முதலாளித்துவத்தைத் தூக்கியெறிவதில்தான் நிரந்தரத் தீர்வு உள்ளது என்பதும் உண்மைதான். அது நடக்காத வரையில், பாதிக்கப்பட்டுக்கொண்டு கொந்தளிப்பிலிருக்கும் நாட்டுமக்களால் தடுப்பு நடவடிக்கையாக எதையும் கட்டியெழுப்ப முடியாது என்றல்ல. தேவையான விழிப்புணர்வை அடையப் பெற்று, அதன் பின்னர் அத்தகைய விழிப்புணர்வின் சரியான வெளிச்சப்பாதையில் நடைபோட வேண்டும் எனும் கேள்வி இங்குதான் எழுகிறது.

இந்த விழிப்புணர்வை ஒருமுறை அடையப்பெற்றுவிட்டால், இந்த பெருகிவரும் ஊழல் மற்றும் முறைகேடுகளுக்கு எதிரான செயலூக்கமான அரணாக இருப்பது சரியான தலைமையின் கீழ் உயர்ந்த பாட்டாளிவர்க்க நீதிநெறி, கலாச்சாரம் மற்றும் அறநெறியின் அடிப்படையில் நடைபெறும் ஒன்றுபட்ட அமைப்புரீதியிலான போராட்ட வடிவில் வெளிப்படும் மக்கள் சக்தியின் சக்திவாய்ந்த உறுதிப்பாடு மட்டுமே என்பது வெளிப்படும். இத்தகைய வெகுஜனப் போராட்டச் சூழல், இத்தகைய போராட்ட உத்வேகம் உருவாக்கிய சிந்தனை வட்டம்தான் ஒன்றுசேர்ந்து பெருகிவரும் லஞ்ச லாவண்யம், மோசடிகள் மற்றும் ஊழல் ஆகியவற்றுக்கெதிரான ஓர் செயலூக்கமான தடையாக அமையும்.

எமது கட்சி மீண்டும் மீண்டும் வலியுறுத்துவது இதைத்தான். நாம் விரும்புகின்ற அத்தகைய போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல காலதாமதமின்றி ஒன்று திரண்டு வருமாறு மக்களை மீண்டுமொருமுறை அறைகூவியழைக்கிறோம் ■

## புதுச்சேரியில் சுவரெழுத்து பிரச்சாரம்



## கருத்தரங்கம்

# கல்வியைக் காப்போம் கலாச்சாரத்தைக் காப்போம்

கல்வியைக் காப்போம் என்ற கருத்தரங்கம் சென்னை பல்கலைக்கழகத்தில் செப்டம்பர் 26, 2018 அன்று நடைபெற்றது. அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டியும், சென்னை பல்கலைக் கழக அரசியல் மற்றும் பொது ஆட்சியியல் துறையும் இக்கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்திருந்தன.

திரு எஸ் கோவிந்தராஜுலு, துணைத் தலைவர், அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டி, தனது உரையில் வகுப்பு 1 முதல் அமல்படுத்தப்பட்ட தடையற்ற தேர்ச்சிக் கொள்கையை (No Detention Policy) திரும்பப்பெறு மாறும், பாஸ்–ஃபெயில் நடைமுறையை மீண்டும் அமல்படுத்து மாறும் கோரினார்.

பேராசிரியர் ஜே காந்திராஜ், தலைவர், ஏயுடி, தேசிய உயர்கல்வி ஆணைய மசோதாவை திரும்பப்பெறுமாறும் யுஜிசியை கலைக்கும் முடிவைக் கைவிடுமாறும் கோரினார்.

பேராசிரியர் ராமு மணிவண்ணன், சென்னை பல்கலைக் கழக அரசியல் மற்றும் பொது ஆட்சியியல் தலைவர், தரவாரி தன்னாட்சி என்ற பெயரில் பல்கலைக்கழகங்களுக்கு நிதியை வெட்டுவதை கண்டித்ததோடு துவங்கப்படாத தனியார் ஜியோ பல்கலைக்கழகத்திற்கு ரூ1000 கோடி பொது மக்கள் பணத்தை ஒதுக்கும் முடிவை திரும்பப்பெறக் கோரினார்.

பேராசிரியர் ஐ அருள் அறம், தலைவர், அண்ணா பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கல்வித்துறையில் குறிப்பாக பல்கலைக்கழகங்களில் ஊழல் மலிந்து வருவதையும் இதை கண்டும் அரசாங்கம் வாளாவிருப்பதையும் கண்டித்தார்.

திரு எம் ஜே வால்டேர், மாநிலச் செயலாளர், அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம், மாணவர்கள் மீது பாலியல் தாக்குதல்கள் அதிகரித்து வருவது கவலை அளிப்பதாகவும் இதற்குக் காரண மாகத் திகழும் ஆபாசம், வக்கிரம், மதுபோதைப் பரவலை அரசாங்கங்கள் தடுக்கத் தவறிவிட்டதை சுட்டிக்காட்டினார்.

திரு எஸ் எச் திலகர், தமிழ்நாடு மாநில கன்வீனர், அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டி, மருத்துவத்துறையையும் மருத்துவக்கல்வியையும் முழுவதுமாக தனியார்மயமாக்கும் தேசிய மருத்துவ ஆணைய மசோதாவையும் நீட் தேர்வையும் திரும்பப்பெறக்கோரினார்.

சென்னையில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களும், கல்லூரிப் பேராசிரியர்களும், பெற்றோர்களும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர் ■



திரு எஸ் கோவிந்தராஜுலு, அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டி துணைத் தலைவர் உரையாற்றுகிறார்



சென்னை கருத்தரங்கில் கலந்துகொண்ட பெற்றோர்கள், மாணவ மாணவியர்கள்

மதுரை காந்தி அருங்காட்சியகத்தில் அக்டோபர் 5, 2018 அன்று அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டி (ஏஐஎஸ்இசி) மற்றும் அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (ஏஐடிஎஸ்ஓ) இணைந்து கல்வி கல்விக் கருத்தரங்கம் நடத்தினர். கருத்தரங் கிற்கு ஏஐடிஎஸ்ஓ மாநிலச் செயலாளர் எம் ஜே வால்டேர் தலைமை வகித்தார்.

இந்திய உயர் கல்வி ஆணைய மசோதா (ஹெச்இசிஐ) கல்வியை பாசிசமயம், கார்ப்பொரேட் மயம், முழு தனியார்மயம் மற்றும் காவிமயமாக்கும் முயற்சி என்று மூட்டாவின் முன்னாள் செயலாளர் பேராசிரியர் விஜயகுமார் பேசினார்.

கல்வி நிலையங்களில் நடைபெற்றுவரும் ஊழல்கள் குறித்தும் ஜனநாயகபூர்வ விவாதங்கள் நடத்த உகந்த சூழலை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் மதுரை கல்லூரி முன்னாள் முதல்வர் பேராசிரியர் முரளி உரையாற்றினார்.

தொடக்கக் கல்வி மட்டுமல்லாது உயர்கல்வி வரை கல்வியின் தரத்தை பாதித்திருக்கும் 1 முதல் 8 வகுப்பு வரை தற்போது இருக்கும் தடையில்லாத் தேர்ச்சிக் கொள்கையைத் திரும்பப்பெறவேண்டும் என்று வலியுறுத்தி ஏஐஎஸ்இசி இன் தமிழ் மாநில கன்வீனர் எஸ் ஹெச் திலகர் உரையாற்றினார்.

சிறப்புரையாற்றிய வி என் ராஜசேகர், ஏஐடிஎஸ்ஓ, அகில இந்தியத் துணைத் தலைவர் தனது உரையில் ‘கல்வியை மேலும் மேலும் தனியார்மயமாக்கி அதை உலகளாவிய சந்தைப் பொருளாக மாற்று வதற்காகத்தான் நீட் கொண்டுவரப்பட்டுள்ளது எனவும், மக்கள் தங்கள் வியர்வையும் ரத்தமும் சிந்தி சம்பாதித்த பணத்தை வரியாகக் கொள்ளை யடிக்கும் அரசாங்கம் அதை மக்களின் அடிப் படைத்தேவையான கல்விக்கு செலவழிக்காமல் இதுவரை தொடங்கப்படாத ஜியோ நிறுவனத் திற்கு ரூ1000 கோடி நிதியை அளிக்கிறது. ஆனால் மக்களின் உண்மையான பிரச்சினைகளிலிருந்து கவனத்தை திசை திருப்புவதற்காக சாதி, மத, இன, மோதல்களையும் உணவு, பசு பிரச்சினைகளையும் தூண்டிவிடுகின்றனர். எனவே மக்கள், குறிப்பாக மாணவர்கள் தங்களது உண்மையான பிரச்சினைகளை புரிந்து கொண்டு உண்மையான எதிரிக்கு எதிராகப் போராட வேண்டும்.

இந்திய விடுதலைக்குப் போராடிய பகத் சிங், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோர் அந்நியர் களை இந்திய மண்ணிலிருந்து விரட்டுவது மட்டும் சுதந்திரப்போராட்டத்தின் நோக்கமல்ல, அவ்விடத்தில் மனிதனை மனிதன் சுரண்டாத சோசலிசத்தை நிறுவ வேண்டும் என்று கூறினர்.

அவர்களது நிறைவேறாத ஆசையை பூர்த்தி செய்வதற்கு போராட்ட இயக்கங்களைக் கட்டி யெழுப்பி வரும் அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கத்தை கல்லூரிகளில், பள்ளிகளில், பகுதிகளில் உருவாக்கி, மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்தும், குறிப்பாக கல்விப் பிரச்சினைகளுக்காக தொடர் போராட்டங்களை வளர்த்தெடுக்க வேண்டும்’ என்றும் அறைகூவல் விடுத்தார்.

மதுரையில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ மாணவியர் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர் ■




தோழர் வி என் ராஜசேகர், ஏஐடிஎஸ்ஓ, அகில இந்தியத் துணைத் தலைவர் உரையாற்றுகிறார்



மதுரை கருத்தரங்கில் கலந்துகொண்ட மாணவ மாணவியர்கள்

# எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)இன் 3வது கட்சி காங்கிரஸையொட்டி தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் நடைபெற்ற கட்சி மாநாடுகள்

கட்சியின் 3வது அகில இந்திய காங்கிரஸை ஒட்டி மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் வட்டார மற்றும் மாவட்ட மாநாடுகள் நடைபெற்று வருகின்றன.

கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்களின் வழிகாட்டுதலுக்கு இணங்க, உழைக்கும் மக்களின் போராட்ட இயக்கங்களில் பங்கேற்று புடம்போடப்பட்ட இளம் தோழர்களை முன்னணிக்கு கொண்டுவந்து கட்சி அமைப்பை திடப்படுத்தி விரிவுபடுத்தும் நோக்கில் இம் மாநாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் மக்களின் போராட்டங்களை சரியான வழியில் நடத்த இன்றைய தேசிய மற்றும் சர்வதேசிய அரசியல் சூழ்நிலையை ஆய்வுசெய்து மிகச் சரியாகப் புரிந்துகொள்ளும் தத்துவார்த்தப் போராட்டமும் நடத்தப்படுகின்றன. இதன் மூலம் கட்சி முன்வைத்துள்ள தேசிய, சர்வதேசிய சூழ்நிலை குறித்த ஆவணங்களின் மீது திருத்தங்களும் சேர்க்கைகளும் அடிமட்டத் தொண்டர் முதல் அனைவராலும் கட்சித் தலைமைக்கு அனுப்பப்படுகின்றன. அவை இறுதியாக கட்சிக் காங்கிரஸில் விவாதித்து ஏற்றுக்கொள்ளப்படும்.

சென்னையில் மத்தியச் சென்னை வட்டார அமைப்புக் கமிட்டியின் மாநாடு செப் 30 அன்று புரசை, ராட்லர் தெரு மாநிலக் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட அமைப்புக் கமிட்டி உறுப்பினர் தோழர் ராஜகோபால் அதனை நடத்திவைத்தார். தோழர் என் பி துரையை செயலாளராகவும் நான்கு உறுபினர்களையும் கொண்ட மத்தியச் சென்னை வட்டார அமைப்புக் கமிட்டி புதிதாக அமைக்கப்பட்டது.



செப் 30, 2018 அன்று மத்தியச் சென்னை வட்டார அமைப்புக் கமிட்டி மாநாடு

விருதுநகர் மாவட்டத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) விருதுநகர் யூனிட் கூட்டம் அக் 2 அன்று திருத்தங்கல் நகரில் நடைபெற்றது. மாநில அமைப்புக் கமிட்டி உறுப்பினர் தோழர் ராஜகோபால் அதனை நடத்தி வைத்தார். தோழர் பி பாண்டியன் பொறுப்பாளராக கொண்ட விருதுநகர் யூனிட் புதிதாக அமைக்கப் பட்டது.

தென்சென்னை வட்டார அமைப்புக் கமிட்டியும் தனது வட்டார மாநாட்டை அக் 7 அன்று மாம்பலத்தில் உள்ள பாட்டாளி சிந்தனை அலுவலகத்தில் நடத்தியது. மாவட்ட அமைப்புக் கமிட்டி சார்பில் தோழர் சந்திரன் அதனை நடத்திவைத்தார். தோழர் எஸ் கணேசனை செயலாளராகவும் நான்கு உறுப்பினர்களையும் கொண்ட புதிய தென்சென்னை வட்டார அமைப்புக் கமிட்டி நியமிக்கப்பட்டது.

கொருக்குப் பேட்டை மீனாம்பாள் நகரில் வடசென்னை (கிழக்கு) வட்டார மாநாடு அக் 7 அன்று மாலை நடைபெற்றது. மாவட்ட அமைப்புக் கமிட்டி உறுப்பினர் தோழர் திலகர் அம்மாநாட்டை நடத்தி வைத்தார். தோழர் சடையாண்டியைத் செயலாளராகவும் மூன்று உறுப்பினர்களையும் கொண்ட புதிய வடசென்னை (கிழக்கு) வட்டார அமைப்புக் கமிட்டி நியமிக்கப்பட்டது.

இந்த மாநாடுகள் அனைத்திலும் தேசிய அளவில் நடந்துவரும் தற்கால அரசியல் நிகழ்வுகளும் மாற்றாங்களும் ‘முதலாளித்துவ எதிர்ப்பு பாட்டாளிவர்க்கப் புரட்சி’ என்ற இந்தியாவின் புரட்சித் திட்டத்தின் அடிப்படையில் விவாதிக்கப்பட்டன. சர்வதேசிய நிகழ்வுகள் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் அடிப்படையில், சர்வதேசிய அளவில் இன்று நிலவிக்கொண்டிருக்கும் காலக்கட்டமான, லெனின் வகுத்துக் கொடுத்த, ‘ஏகாதிபத்தியம், போர் மற்றும் பாட்டாளிவர்க்கப் புரட்சிக் காலக்கட்டம்’ என்ற அடிப்படையில் தோழர்கள் ஆய்வுசெய்து தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர். முழுமையான விவாதங்களுக்குப் பிறகு, உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவு பெற்று ஏற்றுக் கொள்ளப்பட்டவையும் ஏற்றுக்கொள்ளப்படாதவையும் இரண்டையும் பதிவுசெய்து, அவை மேல்மட்ட கட்சி அமைப்பிற்கு அனுப்பிவைக்கப் பட்டன. தோழர்கள் அனைவரும் ஆழ்ந்த கவனத்துடன் இந்த விவாதங்களில் ஈடுபட்டனர்.

இந்தியப் பாட்டாளிவர்க்கப் புரட்சிகர இயக்க வரலாற்றில் எமது கட்சியான எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) இன் இம் 3வது காங்கிரஸும் அதையொட்டி நடைபெறும் தமிழ்நாட்டு மாவட்ட வட்டார மாநாடுகளும் வரலாற்றில் குறிப்பிடத்தக்கவையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை ■



அக் 2, 2018 அன்று விருதுநகர் யூனிட் கூட்டம்



அக் 7, 2018 அன்று தென்சென்னை வட்டார அமைப்புக் கமிட்டி மாநாடு



அக் 7, 2018 அன்று வடசென்னை (கிழக்கு) வட்டார அமைப்புக் கமிட்டி மாநாடு

# பாரதியாரின் 97வது நினைவுதினம்

செப்டம்பர் 11, சுப்பிரமணி பாரதியாரின் 97வது நினைவுதினமாகும். ஒவ்வொரு வருடமும் அந்நாளைச் சிறப்பிக்கும் வகையில் அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கமும் (AIDYO) அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கமும் (AIDSO) அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கமும் (AIMSS) தமிழ்நாடு முழுவதும் பல்வேறு பொது நிகழ்ச்சிகளை நடத்திவருகின்றன.

அவ்வகையில் இவ்வருடம் செப்டம்பர் 11 அன்று சென்னை வியாசர்பாடியில் ஏஐடிஒய்ஒ பொதுக்கூட்டத்தை நடத்தியது. அதில் மகளிர், மாணவர் சங்க தோழர்கள் உரையாற்றினர்.

இதேபோன்று, சென்னை கொருக்குப்பேட்டையில் செப் 16 அன்று மகளிர் சங்கமும், மாணவர் சங்கமும் இணைந்து பாரதியாரின் கூட்டத்தை நடத்தியது.

செப் 11 அன்று தேனியிலும் கூட்டம் நடைபெற்றது. தேனி மாவட்டம் சிலோன் காலனியிலும் கூட்டம் நடைபெற்றது ■




செப் 11 அன்று சென்னையில் நடைபெற்ற கூட்டம்



செப் 16 சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் பள்ளிச் சிறுவர்கள் பாரதி மீதான பாடல்கள் பாடும் காட்சி



செப் 11 தேனியில் நடைபெற்ற கூட்டம்



சிலோன் காலனி–தேனி மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டம்



செப் 11 புதுச்சேரி மாநிலத்தில் பாரதியாரின் உருவச் சிலைக்கு மாலை அணிவிக்கும் காட்சி

# குடிசை மாற்று வாரிய மக்களின் போராட்டமும் அரசு அடக்குமுறையும்

சென்னை, வியாசர்பாடி சத்தியமூர்த்தி நகரில் குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளில் 300 வீடுகளை உள்ளடக்கிய பழுதடைந்த 10 பிளாக்கு களை இடித்துவிட்டு புதிதாக கட்டித் தருவதற்கா கவும் அதில் குடியிருப்போர் தம் வீடுகளை காலி செய்து தரவேண்டுமெனவும் ஒரே தவணையாக ரூ8,000 மட்டும் நிவாரணம் அளிக்கப்படுமெனவும் வாரியம் நவம்பர் 2017ல் அறிவித்தது.

தற்காலிக மாற்று குடியிருப்பு ஏதும் ஏற்படுத்தித் தராமல் வீடுகளை காலிசெய்யச் சொல்லும் இந்த அறிவிப்பை அடுத்து மாற்று குடியிருப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட 'சத்தியமூர்த்தி நகர் மக்கள் போராட்டக் கமிட்டி' அமைக்கப்பட்டது. இந்த மோசமான, மனிதாபி மானமற்ற நிவாரணத் தொகையை ஏற்கமறுத்து அடிப்படை வசதிகளுடன் தரமான மாற்றுக் குடியிருப்பு வேண்டுமென நிர்வாகத்திற்கு முறைப்படி மனு அளித்தனர்.

மேலும் மாற்றுக் குடியிருப்பு வழங்கப்பட்டபின் வீடுகளை உடனடியாக காலிசெய்வதாகவும் தெரிவித்தனர். அவ்வாறு மாற்றுக் குடியிருப்புகள் வழங்க முடியாவிட்டால் ரூ30,000 அட்வான்ஸா கவும் மாதவாடகை ரூ3,000மும் அளிக்கவேண்டு மென கோரிக்கை வைத்தனர். வாரியம் பதிலேதும் அளிக்காமல் காலந்தாழ்த்தி மக்கள் உயிரோடு விளையாடியது.

ஜனவரி 30, 2018ல் குடிசை மாற்று வாரிய அதிகாரிகள் முறையான அறிவிப்பின்றி திடீரென அறைகுறையான கருத்துக்கேட்புக் கூட்டம் ஒன்றை நடத்தினர். அக்கூட்டத்திற்கு வந்த அதிகாரிகள் தற்போதுள்ள 3அடுக்கு கட்டிடங்களை இடித்து விட்டு 13அடுக்கு கட்டிடங்களாக கட்டப்போவதா கவும் அதில் தற்போதுள்ள 300 வீடுகளுக்கு பதிலாக 468 வீடுகளை கட்டப்போவதாகவும் அறிவித்தனர். மேலும், புதிதாக கட்டப்படவுள்ள கட்டிடங்களில் பராமரிப்பு பணிகளை வாரியம் செய்யாதெனவும் அவற்றை மக்களே பார்த்துக் கொள்ளவேண்டு மெனவும் தெரிவித்தனர். 300 வீடுகளுக்கு 8 மாடிகள் எனவும் மீதமுள்ள 5 அடுக்குகளை விற்பனை செய்யப்போவதாகவும் அதில் கிடைக்கும் தொகை யில் வருமானத்தில் திட்டத்தொகையின் பற்றாக் குறையை சமன்செய்யப் போவதாகவும் தெரிவித்தனர்.

ஆனால் தற்போதைய கட்டிட செலவுகளை விசாரித்தபோது ரூ60கோடி திட்ட மதிப்பீடு மிக அதிகமாக உள்ளதாக அறிய முடிந்தது. வாரியத்தின் இந்த அனைத்து நடவடிக்கையாலும் அதிருப்தி அடைந்த மக்கள் தங்களுக்கு 3 அடுக்கு கட்டிடங்களே போதும் 13 அடுக்கு கட்டிடங்கள் வேண்டாம் எனவும் பராமரிப்பு தொகையை ஏழை மக்களின் மீது திணிக்காமல் வாரியமே பராமரிப்பு செய்ய வேண்டும் எனவும், கட்டிடப்பணிகள் தொடங்கு வதற்கு முன்னால் மக்களின் கருத்துக்களை கேட்டு பின்னர் தொடங்குமாறும் அனைத்து 300 குடியிருப்பு வாசிகளும் கோரிக்கை வைத்தனர்.ஒவ்வொரும் தனித்தனியாக கையொப்பமிட்டு அளித்த கோரிக்கை மனுக்கள் மேலாண்மை இயக்குநர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை செயலர், தமிழக முதல்வர், மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

ஆனால் வாரியம் இந்த நியாயமான கோரிக்கை களை ஏற்க மறுத்து பதில் அனுப்பியது. அந்த பதிலில் ரூ8,000 அல்லது 10x10 தகர சீட்டிலான மாற்றுக் குடியிருப்பு வழங்குவதாகவும் தெரிவிக்கப் பட்டது. ஆனால் அவை எந்த அடிப்படை வசதி களும் இல்லாத விலங்குகள்கூட வசிக்கமுடியாத அளவிற்க மோசமாக இருந்தது. மேலும் அவ்விடம் மக்கள் வசிக்கத் தகுதியற்ற ஒதுக்குப்புறமான சுடு காட்டிற்கு அருகில் இருந்தது. புதிதாக கட்டப்படும் கட்டிடங்கள் 13 அடுக்குகளாக மட்டுமே கட்டித் தரமுடியுமென்பதோடு பராமரிப்பு பணிகளை வாரியம் ஏற்காதெனவும் தெரிவிக்கப்பட்டது. இதை எதிர்த்து மக்கள் பல்வேறு போராட்டங் களை நடத்திவந்தனர்.

மக்கள் போராட்டத்தின் நிர்ப்பந்தத்தின் காரணமாக மீண்டும் ஒரு கூட்டத்தை 3.7.2018 அன்று நடத்தினர். அக்கூட்டத்தில் மக்களின் கோரிக்கைகள் உயர் அதிகாரிகளிடம் தெரிவிக்கப் பட்டு மீண்டும் மக்களிடம் உரிய பதில் அளிக்கப் படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. மக்களும் பதிலுக்காக காத்திருந்தனர். ஆனால் அப்படி எந்த பதிலும் வரவில்லை.

இதற்கிடையே கடந்த 19.7.2018 அன்று இறுதி அறிவிப்பென ஒரு நோட்டீஸ் ஒட்டப்பட்டது. அதில் 25.7.2018ற்குள் வீடுகளை காலிசெய்ய வேண்டுமென வும் இல்லையென்றால் போலீசார் துணையுடன் வலுக்கட்டாயமாக வீடுகளி லிருந்து அகற்றப்படுவீர் களெனவும் குடிநீர், மின் சாரம், கழிவுநீர் இணைப்பு கள் துண்டிக்கப்படுமெனவும் அறிவித்தனர்.

இந்த அறிவிப்பு மக்களின் அச்சத்தை மேலும் அதிகப் படுத்தியது. 23.7.2018 அன்று பகுதி மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு குடிசை மாற்று வாரியத்தை முற்றுகையிட்டனர். மேலும் மேலாண்மை இயக்குநர், செயலர் ஆகியோரை சந்தித்து மீண்டும் மனு அளித்தனர்.




ஆகஸ்ட் 30, 2018 சேப்பாக்கம் அருகில் நிலஉரிமை, குடியிருப்புரிமை கேட்டு மனிதசங்கிலிச் கூட்டுப் போராட்டம்

இவை எதற்கும் செவிசாய்க்காத அரசாங்கம் வாரியமும் 8.9.2018 அன்று காலை 6 மணியளவில் திடீரென 600க்கும் மேற்பட்ட போலீசாரை குவித்து மின்சாரம் உள்ளிட்ட அனைத்து இணைப்புக்களும் துண்டிக்கப்பட்டன. மேலும் நன்கு திட்டமிடப் பட்ட அடக்குமுறையின் ஒருபகுதியாக அங்கு வசிக்கும் 300 குடும்பங்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பினை திசைத்திருப்ப 10 பிளாக்குகளை சேர்ந்த மக்கள் ஒன்றுசேராதபடி 10 குழுக்களாக போலீசார் பிரிக்கப்பட்டு ஒரே நேரத்தில் 10 பிளாக்குகளுக் குள்ளும் நுழைந்தனர். கட்டிடத்தை இடிக்க 100க்கும் மேற்பட்டோர் கடப்பாறை, சுத்தியல் உள்ளிட்ட பொருட்களுடன் அப்பிளாக்குகளுக்குள் நுழைந்தனர். ஏற்கெனவே திட்டமிட்டபடி 10 குடிசை மாற்றுவாரிய குழுக்களின் தலைமையில் உள்ளே புகுந்து மக்களை வெளியே வலுக்கட்டாயமாக வெளியேற்றி வீடுகளின் கதவு ஜன்னல்களை இடிக்கும் பணியை திட்டமிட்டு ஒரே நேரத்தில் துவங்கினர். இது ஒன்றுபட்ட மக்களின் போராட்டத்தை கண்டு அஞ்சிய ஆளும்வர்க்கத்தின் சூழ்ச்சி என தெளிவாகத் தெரிந்தது.

இதுபோன்ற ஒரு படையை இதுவரை சந்தித்திராத மக்கள் அதிர்ச்சிக்குள்ளானாலும் அதைத் தடுப்பதற்கு கடுமையாக முயற்சித்தும் அடக்குமுறை அரசின் அராஜகத்தின் கோழைத்தனத்திற்குமுன் மக்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. மக்களனைவரும் வீட்டிலிருந்து வெளியே விரட்டப்பட்டனர். குழந்தை கள், சிறுவர்கள், கர்ப்பிணி பெண்கள், முதியோர் போன்றோரும் ஈவிரக்கமின்றி வெளியே இழுத்துப் போடப்பட்டனர்.

ரூ8,000த்திற்கான காசோலையை தற்போதே வாங்க மறுத்தால் புதிய கட்டிடத்தில் இடம் கிடைக்காது என்ற பொய்யானதொரு வாதத்தைகூறி மக்களிடம் திணித்தனர். மேலும் இரண்டு நாட்களில் கனரக இயந்திரங்களைக் கொண்டு கட்டிடம் இடிக்கும் பணியும் தொடங்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டது.

குடிசை மாற்று வாரியத்தின், அரசின் அடக்கு முறை செயலை கண்ணுற்ற சமூக ஆர்வலர்களும் வழக்கறிஞர்களும் பொதுமக்களும் மிகுந்த அதிர்ச்சி யடைந்தனர். சுமார் 8 மாதங்களுக்கும் மேலாக ஒன்றுபட்டு போராடிய மக்களின் நியாயமான கோரிக்கைகள் அரசின் இந்த திட்டமிட்ட அடக்கு முறையின் இயந்திர சத்தத்தில் ஊடகங்களின் காதுகளிலும் விழவில்லை. இத்துணை அடக்குமுறை களுக்கு பின்னரும் தொடர்ந்து போராட மக்கள் உறுதியேற்றுள்ளனர். இதேபோல் சென்னை மாநகரத்தை குடிசைகளற்ற பகுதிகளாக மாற்று கிறோம் என்று சொல்லிக்கொண்டு இவர்கள் குடிசை மாற்று வாரியக்குடியிருப்புகளில் இருந்து அங்கு வசித்து வரும் மக்களை வெளியேற்றி கட்டிடங்களை இடித்துவிட்டு அதிக குடியிருப்பு களை கட்டி விற்பனை செய்யும் திட்டத்தை மிகவேகமாக குடிசை மாற்று வாரியம் செய்து வருகிறது. ஆங்காங்கே மக்கள் பல்வேறு வடிவங் களில் இதை எதிர்த்து போராடி வருகின்றனர். அப்படி போராடுவோர் அனைவரும் ஒன்று சேர வேண்டியது காலத்தின் தேவையாகும். மேலும் அப்படிப்பட்ட போராட்டத்திற்கு அனைத்து பகுதி உழைக்கும் மக்களும் ஆதரவுதரவேண்டும். இதுபோன்ற குடிசை பகுதி மக்களுடைய போராட்டங்களை ஒடுக்கும் செயல்களுக்கெதிராக அனைத்துபகுதி மக்களும் ஒன்றுசேர்ந்து குரல் கொடுக்கவேண்டும் ■

# எட்டுவழிச்சாலை எதிர்ப்புக் கூட்டியக்கம் நடத்திய நிலஉரிமை-ஜனநாயக உரிமை விழிப்புணர்வுக் கருத்தரங்கம்





செப்டம்பர் 30, 2018 அன்று திருவண்ணாமலையில் நடைபெற்ற நிலஉரிமை-ஜனநாயக உரிமை விழிப்புணர்வுக் கருத்தரங்கில் முன்னாள் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஹரி பரந்தாமன் உரையாற்றுகிறார். மாநில பொறுப்பாளர் தோழர் A ரெங்கசாமி, அகில இந்திய விவசாயகள் மற்றும் விவசாயத் தொழிலாளர் சங்க சார்பில் கலந்துகொண்டு உரையாற்றினார்

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

பாட்டாளி சிந்தனை

TN/CCN/429/2018-2020
TN/PMG (CCR)/WPP-373/2018-2020
Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# செப்டம்பர் 10ஆம் தேதியன்று பொது வேலைநிறுத்தம் மற்றும் கடையடைப்புக்கு இடதுசாரி கட்சிகள் விடுத்திருக்கும் அறைகூவல் குறித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் அறிக்கை

*செப்டம்பர் 10 ஆம் தேதியன்று பொது வேலை நிறுத்தம் மற்றும் கடையடைப்புக்கு இடதுசாரி கட்சிகள் விடுத்திருக்கும் அறைகூவல் குறித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் 07.09.2018 அன்று கீழ்க்கண்ட அறிக்கையை ஊடகங்களுக்கு விடுத்துள்ளார்.*

தொடர்ந்து அதிகரித்துவரும் பெட்ரோல்–டீசல் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசிக்கெதிராகவும், பெருகிவரும் வேலையின்மைக்கெதிராகவும், விவசாயிகளிகளின் கடனைத் தள்ளுபடி செய்யக்கோரியும், விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலையை நிர்ணயம் செய்யக்கோரியும், எதிர்க்கட்சிகளின் குரல் நசுக்கப்படுவதற்கு எதிராகவும் மற்றும் மிகவும் கண்டனத்துகுரிய வகையில் இருக்கும் மத்திய பாஜக ஆட்சியின் கீழான மதவாத அரசியலுக்கு எதிராகவும் பிற எதிர்க்கட்சிகள் செப்டம்பர் 10 ஆம் தேதியன்று பொது வேலை நிறுத்தம் மற்றும் கடையடைப்புக்கு அழைப்பு விட்டுருப்பதாகவும், செப்டம்பர் 10ஆம் தேதியன்று நடக்கவிருக்கும் பொது வேலைநிறுத்தம் மற்றும் கடையடைப்புக்கு இடதுசாரி கட்சிகளாகிய நாம் தனியாக அறைகூவல் விடுக்க வேண்டுமென சிபிஎம்–இன் தலைவர் தோழர் சீதாராம் யெச்சூரி அவர்கள் டில்லியில் நம்மிடம் தெரிவித்தார். எமது கட்சியானது அந்த முன்மொழிவுக்கு இசைவு தெரிவித்துள்ளது. இது குறித்து இடதுசாரி கட்சிகளின் ஒரு கூட்டறிக்கையும் விடுக்கப் பட்டிருக்கிறது.

ஊடகமானது வியப்பளிக்கும் விதத்தில் காங்கிரஸ் கட்சி அழைப்பு விட்டிருக்கும் பந்த்–க்கு இடதுசாரி கட்சிகள் ஆதரவளித்திருப்பதாக இன்று அறிவித்திருப்பதைக் கண்டோம். இது உண்மை அல்ல. எங்களைப் பொருத்தமட்டில், காங்கிரஸ் கட்சி அழைப்பு விடுத்திருக்கும் பந்த்–க்கு ஆதரவளிப்பது என்ற கேள்விக்கே இடமில்லை. ஏனெனில், விலைவாசி உயர்வு, வேலையின்மை, எதிர்ப்புக்குரலை நசுக்குவது மற்றும் மதவாத அரசியல் என்பது காங்கிரஸ் ஆட்சியின் போதும்கூட இருந்தது. மேலும், இப்போது காங்கிரஸ் கட்சியானது வெகுஜன இயக்கத்தைக் கட்டிட இத்தகைய அறைகூவலை விடுக்கவில்லை. ஆனால், தேர்தல் ஆதாயத்தைப் பெற்றிடுவதற்காக மட்டுமே இத்தகைய அறைகூவலை விட்டிருக்கிறது. எமது கட்சியாகிய எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி இடதுசாரி வாதத்தைக் கைவிட்டுவிட்டு தேர்தல் ஆதாயம் அடையும் நோக்கத்தில் காங்கிரஸ் கட்சியுடன் புரிதலை ஏற்படுத்திக்கொள்ளும் அரசியலை நடத்துவதில்லை.

இடதுசாரி கட்சிகள் அழைப்பு விடுத்திருக்கும் செப்டம்பர் 10 அன்று நடக்கவிருக்கும் பாரத் பந்த்–ஐ முழு வெற்றிபெறச் செய்திடுமாறு நாட்டு மக்களை நாங்கள் அறைகூவி அழைக்கின்றோம் ■

## செப்டம்பர் 10, 2018 பொது வேலைநிறுத்தம்

# தமிழ்நாட்டில் இடதுசாரி கட்சிகள் நடத்திய மறியல் போராட்டங்கள்




சென்னை



மதுரை



தேனி



சேலம்



புதுக்கோட்டை



கரூர்



ஈரோடு

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, **ஆசிரியர்: ஆ ரெங்கசாமி**

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor : A Rengasamy**
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**